செ.வெ.எண்: 21 நாள்: 13.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் கோடைக்காலங்களில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கிடவும், குடிநீர் பற்றாக்குறை போக்கிட மாவட்ட நிர்வாகம் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் செய்து வருகிறது.

தினசரி நேரடி குடிநீர் சம்மந்தமான புகார்கள் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கிராமங்கள்தோறும் பொதுமக்கள் அறியும் வண்ணம் எவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படவேண்டும், குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துவது மற்றும் ஊராட்சிகள் அனுமதியின்றி முறைகேடாக மின்மோட்டார்களை கொண்டு குடிநீர் உறிஞ்சப்படுவதை தடுத்திடும் பொருட்டும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத்தொடர்ந்து, குடிநீர் சம்மந்தமான அமைக்கப்பட்ட வளர்ச்சித்துறை அலுவலர்கள் கொண்ட குழு கண்காணிப்பில் இன்று (13.03.2017) **திருமானூர் ஒன்றியம், பூண்டி, வெங்கனூர் மற்றும் தா.பழூர் ஒன்றியம், சுத்தமல்லி, தேவனூர் ஊராட்சிகளில் 28** மின்மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற தொடர் நடவடிக்கையில் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.